I.D. 5 / 2022
17.04.2024

W.W.2 மனோகரன்
குறுக்கு விசாரணை (R1 தரப்பு குறுக்கு விசாரணை)

நீங்களும் அன்புமணியும் சேர்ந்து வேலைபார்த்ததாக சொல்லியுள்ளீர்கள் அது எந்த வருடம் என்றால் 2013- முதல் 2019 வரை 5 வருடங்கள் ஒன்றாக வேலை பார்த்தேன். அன்புமணி பெரம்பலூரில் வேலை பார்த்த போது அவருக்கும் அவருடன் வேலை பார்த்த கருப்பன்னன் என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. கருப்பன்னனை தெரியுமா என்றால் அவரும் என்னுடன் வேலை பார்த்தார் தெரியும். கருப்பன்னன் மற்றும் அன்புமணிக்கும் பிரச்சனை ஏற்பட்டதன் அன்புமணி கருப்பன்னனை அடித்ததால் அதன் விளைவாக டெக்ஸோ நிறுவனத்தினரால் அன்புமணிக்கு வேலை வழங்கவில்லை என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது நான் வேலையை விட்டு வந்தபின்பு நடந்திருக்கலாம். பொதுவாக டெக்ஸோ நிறுவனம் வேலைக்கு ஆட்கள் தேவை என்றால் செய்தித்தாளில் விளம்பரம் செய்வார்கள் என்றால் ஆமாம் செய்யவில்லை என்றாலும் எழுதிப்போடுவார்கள் அதை பார்த்து நாங்கள் மனு செய்வோம். டெக்ஸோ நிறுவனம் எந்த இடத்தில் எத்தனை நாட்கள் வேலை செய்ய சொல்கிறார்களோ அந்த நாட்களுக்கு மட்டும் தான் சம்பளம் வழங்குவார்கள் என்றால் சரி. டெக்ஸோ நிறுவனம் தற்போது ஆன்லைன் மூலம் விளம்பரம் செய்கிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறீர்கள் அந்த நிறுவனத்தில் உங்களை வேலைக்கு வேண்டாம் என்று சொன்னால் அடுத்து டெக்ஸோ நிறுவனத்தில் இருந்து வேலை வரும் வரை உங்களை காத்திருப்போர் பட்டியலில் வைத்திருப்பார்கள் என்றால் நாங்கள் வேலை செய்யும் இடத்தில் வேலை தரவில்லை என்றால் அதற்கு அருகாமையில் உள்ள வேறு நிறுவனத்திற்கு மனு செய்பவர்களின் அடிப்படையில் பணி வழங்கப்படும். ஆவின் நிறுவனத்தில் நடத்தப்பட்ட புத்தக கண்காட்சியில் 3 நாட்கள் வேலை பார்த்தற்கு பணம் கொடுக்கப்பட்டு மீண்டும் பணம் எடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளீர்கள் அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆவணம் உள்ளது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆவின் நிறுவனத்தில் நடத்தப்பட்ட புத்தக கண்காட்சியில் 3 நாட்கள்

வேலை பார்த்தற்கு பணம் கொடுக்கப்பட்டு விட்டது அதை பின்னிட்டு பிடித்தம் செய்யவில்லை என்றால் நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. 2019-ம் வருடம் 58 வயது என்று நிங்கள் பணி ஓய்வு பெற்றிருக்கிறீர்கள் என்றால் என்னுடைய TC- ல் சான்றிதழில் வைத்து 58 வயது பூர்த்தி அடைவதாக என்னை அனுப்பிவிட்டார்கள் அதன்பின்னிட்டு 60 வயது வரை வேலையில் இருக்க சட்டம் வந்தது. அன்புமணி உங்கள் நண்பர் என்ற காரணத்தினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (R2 தரப்பு குறுக்கு விசாரணை)**

உங்களுக்கு வேலை கொடுத்தது முன்னாள் படை வீரர்கள் சங்கம் தானே என்றால் டெக்ஸோ நிறுவனத்தில் முன்னாள் படை வீரர்கள் சங்கம். நீங்கள் முதல் முதலில் எங்கு வேலையில் சேர்ந்தீர்கள் என்றால் டாஸ்மார்க் குடோன் பெரம்பலூர். டாஸ்மார்க்கில் வேலை பார்த்த போது டெக்ஸோ நிறுவனம் சம்பளம் கொடுத்தார்களா அல்லது டாஸ்மார்க் சம்பளம் கொடுத்தார்களா என்றால் டெக்ஸோ நிறுவனம் தான் சம்பளம் கொடுத்தார்கள். ஆவின் குளிரூட்டும் நிறுவனத்திற்கு நீங்களாக விரும்பி கேட்டு இடமாற்றம் கேட்டீர்கள் என்றால் ஆமாம் நானாக சென்னையில் உள்ள டெக்ஸோ நிறுவனத்திற்கு சென்று பணி மாறுதல் கேட்டேன். அப்போதும் உங்களுக்கு சம்பளம் டெக்ஸோ நிறுவனம் தான் கொடுத்தது என்றால் சரி. ஆவின் நிறுவனத்தில் இருந்து உங்களை மேற்பார்வை இடுவதற்கு யாராவது வருவார்களா என்றால் இல்லை டெக்ஸோ நிறுவனத்தில் இருந்து தான் வருவார்கள். 27.01.2017-ம் தேதி முதல் 04.02.2017-ம் தேதி வரை நடந்த ஆவின் புத்தக கண்காட்சிக்கு வேலைக்கு அனுப்பியது யார் என்றால் ஆவின் மேலாளர் தான் வாய் மொழி உத்தரவாக அனுப்பினார். டெக்ஸோ நிறுவனத்திற்கு நாங்கள் எத்தனை நாட்கள் OT பார்த்தோமோ அதற்கான கையெழுத்து நாங்களும் போட்டு ஆவின் மேலளரும் போட்டு அதை ஆவின் நிலையத்தில் இருந்து அனுப்பிவைத்தார்கள். உங்களுக்கு மிகை நேர பணிக்கான சம்பளம் வழங்குவது டெக்ஸோ நிறுவனம் தான் என்றால் சரி. உங்களுக்கான சம்பளத்தை

Aavanam

பின்னர் பிடித்தம் செய்ததும் டெக்ஸோ நிறுவனம் தான் என்றால் சரி. உங்களை பொறுத்தவரை நீங்கள் ஒரு டெக்ஸோ தொழிலாளி என்றால் சரி.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது
கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு
சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி
என ஒப்புக் கொள்ளப்பட்டது.

தலைமை தாங்கும் அதிகாரி,
தொழிலாளர் நீதிமன்றம்,
திருச்சி

weblpoc doc